**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு</u>**

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2026–ஆம் வருடம் ஜூன் திங்கள் 06–ஆம் நாள், சனிக்கிழமை

இடைக்கால விண்ணப்பம் எண். 556 / 2025 மற்றும் 557/2025
அ.வ.எண். 105 / 2020

பாலகிருஷ்ணன் மனுதாரர்/ வாதி

/எதிராக/

1. பொன்னுசாமி
2. மதி
3. ரவிச்சந்திரன்
4. பன்னீர்செல்வம்
5. முருகானந்தம்
6. மாவட்ட ஆட்சியர் அவர்கள், தஞ்சாவூர்
7. சார்பதிவாளர் அவர்கள், பூதலூர்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

வழக்கறிஞர்கள் முன்னிலை

| | | |
|---|---|---|
| மனுதாரர்/ வாதிக்காக | : | திரு.A.சித்திரைச்செல்வன் |
| 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்காக | : | திரு.S.வெங்கடேசன் |
| 4 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்காக | : | திரு. உத்திராபதி |
| 6, 7 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் | : | Exparte |



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:13:50 +0530

**உத்தரவு**

வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு அனுமதிக்கோரியும் அதனால் வழக்கினை மறு திறப்பு செய்ய உத்திரவிட கோரியும் உ.வி.மு.ச கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**பொதுவான உத்தரவு** (Common Order)

1) **மனுக்களின் சுருக்கம்:**

1.1) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கு சொத்து விபரத்தில் வாதி எவ்வளவு சொத்து அனுபவித்து வருகிறார் 1 முதல் 5 பிரதிவாதிகள் எவ்வளவு சொத்து அனுபவித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. 2, 3 பிரதிவாதிகளுக்கு எவ்வளவு சொத்தினை எழுதிக் கொடுக்க 1–ஆம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றும், 1–ஆம் பிரதிவாதி எவ்வளவு சொத்தினை செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் தெளிவாக சொல்ல வேண்டிய அவசியம் உள்ளதால் வழக்கின் பிராதின் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

1.2) அதேபோல் பிராதின் 1–வது பத்தியில் 1.04.50 ஏர்ஸ் என்று தட்டச்சு செய்வதற்கு பதிலாக 1.4.50 ஏர்ஸ் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றினையும் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. சொத்து விபரத்தில் வாதி 1 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்தினை தனித்தனி அட்டவணையில் குறிப்பிட்டு சொத்து விவரத்தில் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. வழக்கில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள வழக்கினை மறு திறப்பு செய்ய உத்திரவிட கோரியும் மனு



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:13:56 +0530

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுக்கள் அனுமதிக்கப்படாவிட்டால் வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே அசல் வழக்கினை மறு திறப்பு செய்யவும், திருத்தம் செய்யவும் உத்தரவிட கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>எதிருரைகளின் சுருக்கம்:</u>**

பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படும் என்பதை தெரிந்து கொண்டு ஒரு இடைநிலை மனு தாக்கல் செய்து பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு வாதி தரப்பு விசாரணை முடிவுற்று பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சங்கதிகள் குறித்து மீண்டும் பிராதை திருத்துவதற்கும், வாதி தரப்பு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டதை மறுதிறப்பு செய்வதற்கும் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுக்களை அனுமதித்தால் பிரதிவாதிகளுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்பதால் மனுக்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4) தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்; வழக்கு விசாரணை தொடங்கி பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள வழக்கில் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரும் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:14:03 +0530

5) **தீர்வு**:

5.1) அசல் வழக்கானது 1–ஆம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் (எண்.50/2020) செல்லத்தக்கதல்ல மற்றும் இல்லா நிலையது என விளம்புகை செய்தும் தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ வாதியின் அனுபோகத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என உறுத்து கட்டளை பிறப்பிக்க கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 30.11.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.11.2022 அன்று 7 வினாக்கள் வளையப்பட்டு 08.02.2023 அன்று வாதி தரப்பு சாட்சி விசாரணை துவங்கப்பட்டு தற்போது பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள வழக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2) தற்போது வழக்குரையில் திருத்தம் செய்து சேர்க்க உத்தேசித்துள்ள சங்கதியானது "மேற்படி பொன்னுசாமி தவறான முறையில் செய்துள்ள பத்திரத்தில் "ஈ" அட்டவணை சொத்து மட்டும்தான் பொன்னுசாமிக்குரிய பாக சொத்தாகும். "அ" முதல் "இ" வரையுள்ள அட்டவணை சொத்தினையும் சேர்த்து 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகள் பெயரில் 20.01.2020–ம் தேதி பூதலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.50/2020 என செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார்" என்பதே ஆகும்.

5.3) ஏற்கனவே மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் (எண்.50/2020) செல்லத்தக்கதல்ல மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் பொன்னுசாமி தனக்கு உரிமை இல்லாத "அ" முதல் "இ" வரையிலான அட்டவணை சொத்தையும் சேர்த்து செட்டில்மெண்ட் எழுதியுள்ளார் என்பதையும், மேற்படி வழக்குரை சொத்து விவரம் முழுவதையும்



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:14:09 +0530

எடுத்துரைக்கவும் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.4) அசல் வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பது முழு வழக்கு விசாரணைக்கு பிறகு தான் தெரிய வரும். எதன் அடிப்படையில் ஓர் ஆவணம் செல்ல தக்கது அல்ல என்பதை வாதிதான் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும். எனினும் மேற்படி உத்தேசித்துள்ள திருத்தத்தை வழக்கு விசாரணை துவங்குவதற்கு முன்பு மேற்கொண்டு இருந்தால் நீதிமன்றத்தின் பொன்னான நேரம் வீணடிக்கப்பட்டிருக்காது. பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.5) வழக்கின் தன்மை மற்றும் சூழலை கருத்தில் கொள்ளும் போது மேற்படி அசல் வழக்கில் மேற்கொண்டும் பல மனுக்களை தாக்கல் செய்து வழக்கினை காலம் கடத்துவதை தவிர்க்கவும் இம்மனுவினை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று தீர்வு காண்கிறேன். மேற்படி வழக்குரை திருத்தத்தை அனுமதிப்பதால் வழக்கின் தன்மைக்கும், பிரதிவாதிக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. வழக்கினை நிரூபிக்கும் சுமை வாதியை சார்ந்தது ஆகும்.

6) **இறுதியாக மனுதாரர் ரூ.2000/-ஐ எதிர்மனுதாரருக்கு 12.06.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனுக்களை அனுமதித்து உத்தரவிடுகிறேன். தவறும் பட்சத்தில் இம்மனுவானது தானாகவே ரத்தாகிவிடும்.**



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:14:15 +0530

இவ்வுத்தரவு என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (06.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:14:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.

1. <u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u> இல்லை

2. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u> இல்லை

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.06 19:14:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.